# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calender Case No. 1 of 2024

Deposition of witness for : PW10

Name : லட்சுமி

Father's /Husband Name/ : செல்வம்

Village : தொட்டலாம்பட்டி

Taluk : தருமபுரி

Calling : கூலி வேலை

Age : 29

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.

**எதிரிகள் 1 முதல் 6 வரை ஆஜர் 7ம் எதிரி ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தொட்டலாம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு காவேரிபட்டிணம் அரசுமருத்துவமனைக்கு பிரசவதிற்காக மருத்துவமனையில் இருந்தபோது மதியம் 2 மணிக்கு ஐயோ அம்மா என்னை காப்பாற்றுங்கள் என முனியம்மாள் என்னை எனது கண்ணே போச்சி கண்ணே போச்சி என அழுதார்கள் நான் பார்த்தபோது கண்ணில் இருந்து ரத்தம்

வந்தது. கருவிழி வெளியே வந்துவிட்டது நான் அவரை கேட்டதற்கு ராஜ்குமார் கண்ணில் குத்தி விட்டதாக கூறினார் அவரை நான் பார்த்தேன். அவர் தற்போது ஆஜராகி உள்ளார் என எதிரியை அடையாளம் காட்டினார். விலக்க சென்ற என்னை சிவப்பு புடவை அணிந்துள்ளவர் (சரசு ) என்னை தேவிடியா, கண்டாரஓலி என திட்டினார். அதன்பின்பு மருத்துவர் வந்து மேல் சிகிச்சைக்காக முனியம்மாளை கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். போலிஸார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வேலம்பட்டியில் உள்ள ராஜேந்திரன் எனது தகப்பனார் ஆவார். கருணாநிதி வீடும் எங்களது வீடும் அருகருகே உள்ளது என்றால் சரியல்ல. கருணாநிதி யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது என்று சொன்னால் தெரியும். எதிரிகளது பெயர் எனக்குதெரியாது என்றாலும் முனியம்மாள் சொல்லி கொடுத்தன் பேரில் நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் காவேரிபட்டிண மருத்துவமனைக்கு சென்றதாக கூறும் நாள் தேதி தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த தேதி மேற்படி காவேரிபட்டிணம் மருத்துவமனையில் நிறைய கூட்டம் இருந்தது என்றால் சரிதான். முனியம்மாள் காட்டியதன் பேரில் தான் ராஜ்குமாரை அடையாளம் காட்டுகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக ஜோடனை செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவேரிபட்டிணம் போலிஸார் சம்பவம் நடந்த முடிந்த பிறகு வந்து விசாரித்தார்கள். எதிரிகளுக்கும் நான் சொல்லும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முனியம்மாள் வேலம்பட்டியை சார்ந்தவர் என்பதாலும் நானும் வேலம்பட்டியை சார்ந்தவர் என்பதாலும் அவர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் சமயத்தில் நான் சம்பவ இடத்திற்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. முனியம்மாள் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என கூறுவதை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். கண்விழி வெளியே வந்ததாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். அதேபோல் என்னை விலக்கும்போது திட்டியதாக

கூறுவதும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். முனியம்மாள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க நானும் எனது கணவரும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.